ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1950/29 - 2016 ජනවාරි මස 20 වැනි බදාදා - 2016.01.20

*1950/29 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5, 6 மற்றும் 6 (அ) பிரிவுகளின் நியதிகளின் கீழான அனுமதி**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 மற்றும் 48 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதன் 5, 6 மற்றும் 6 (அ) ஆம் பிரிவுகளால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணியை உடைமையில் வைத்திருப்பதற்கும் பிடித்து வைத்திருப்பதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

1. **வெளிநாட்டுச் செலாவணியை உடைமையில் வைத்திருத்தல் மற்றும் பிடித்து வைத்திருத்தல் :**

1.1 இலங்கையில் வதியும் பின்வரும் நபர்கள் கீழே பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க வெளிநாட்டு நாணயங்களை உடைமையில் வைத்திருக்கவும் பிடித்து வைத்திருக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு, அவரின் அதிகாரத்தின் நிபந்தனைகளின் வரையறைகளுக்குட்பட்டவாறு வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது தேடிய வெளிநாட்டுச் செலாவணியை உடைமையில் வைத்திருக்கவும் அத்துடன் பிடித்து வைத்திருக்கவும் முடியும் ;

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு, அவரது அதிகாரத்தின் நிபந்தனை வரையரைகளுக்குட்பட்டவாறு வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது பெற்ற அல்லது தேடிய வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருக்கவும் அத்துடன் பிடித்து வைத்திருக்கவும் முடியும் ;

(இ) தனிநபர் ஒருவர், 10,000 அமெரிக்க டொலர் அல்லது அதற்குச் சமனான வேறேதேனும் நாணய வகையில் ஒட்டுமொத்தமான பெறுமதியைக் கொண்ட நாணயத் தாள்களை அத்துடன்/ அல்லது பயணிகள் காசோலையினை தமது உடைமையில் வைத்திருக்கலாம் ; ஆனால் அத்தகைய வெளிநாட்டு நாணயமானது பின்வரும் தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(i) வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தின் பொருட்டு ஒருவர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரிடமிருந்து கொள்வனவு செய்த வெளிநாட்டு நாணயத்தை பயன்படுத்தாது திரும்பி இலங்கைக்கு வருகின்றபோது எடுத்துவருமிடத்து, அல்லது

(ii) இலங்கைக்கு வெளியே வசிக்கும் ஒருவருக்கு ஆற்றப்பட்ட சேவையின் பொருட்டு ஒருவர் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்தைச் சம்பளமாகப் பெற்றுள்ளவிடத்து, அல்லது

(iii) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக்கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்குகளை வைத்திருப்பவர்கள் தங்களுடைய தொடர்பான கணக்குகளிலிருந்து மீளப் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத் தாள்கள்.

(ஈ) இலங்கைக்கு வருகை தருகின்ற அல்லது இலங்கையை விட்டுச் செல்கின்ற பயணிகளுக்கு அவர்களின் வதிவிட அந்தஸ்தினைக் கருத்திற்கொள்ளாது தீர்வையற்ற சலுகைகளின் கீழ் பொருட்களையும் பணிகளையும் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட வியாபாரத்தினை மேற்கொள்கின்ற இலங்கைக்கு வெளியே வதிகின்ற அல்லது அனுமதிக்கப்பட்ட வியாபாரத்தினை மேற்கொள்கின்ற இலங்கையில் வதியும் ஆளொருவருக்கு பொருட்களையும் பணிகளையும் வழங்குகின்றமை தொடர்பில் அவ்வாளொருவரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தினை அத்தகைய தனிப்பட்ட ஆளொருவர் தனது உடமையில் வைத்திருக்கலாம்.

1.2 இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிநபர் ஒருவர், அவர் இலங்கைக்கு வெளியே இருந்தபோது உழைத்த அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்/ அதிகாரமளிக்கப்பட்ட நபர்களுடன் பேணும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து பெற்ற வெளிநாட்டு நாணயத்தினை இலங்கையில் வரையறையெதுவுமின்றி தமது உடமையில் பிடித்து வைத்திருக்கலாம்.

**2. இலங்கையில் வதியும் நபரொருவரினால் வெளிநாட்டு நாணயத்தை பிடித்து வைத்திருக்க முடியுமான காலம் :**

2.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தின் பொருட்டு வெளிநாட்டு நாணயத்தை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரிடமிருந்து பெற்ற தனிநபரொருவர், அவ்வெளிநாட்டு நாணயத்தைக் குறிப்பிட்ட நோக்கத்தின் பொருட்டு பயன்படுத்தாது இருப்பின், அவை கிடைத்த தினத்திலிருந்து 90 நாட்களுக்கு மேல் அவ்வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவாக மாற்றாது தாம் பிடித்து வைத்திருக்கலாகாது.

2.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தின் பொருட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரிடமிருந்து தனிநபரொருவரால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயம் இலங்கைக்குள் திரும்ப எடுத்துவரப்படுமிடத்து, அவர் குறித்த வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவாக மாற்றாது 90 நாட்களுக்கு மேல் தாம் பிடித்து வைத்திருக்கலாகாது.

2.3. தொழிலொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, தொழில்சார் பணிக்காக அல்லது வியாபாரத்தினை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டிற்குச் செல்லுகின்ற தனிநபரொருவர் அத்தகைய தொழில்வாய்ப்பு, தொழில்சார் நிபுணத்துவம் அல்லது வியாபாரத்திலிருந்து உழைத்த அல்லது பெற்ற வெளிநாட்டு நாணயத்தினை அத்தகைய ஆள், அத்தகைய நாணயம் தாய்நாட்டிற்கு எடுத்துவரப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கிடையில் இலங்கை ரூபாவிற்கு மாற்றாமல் அல்லது வெளிநாட்டு நாணய கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமாக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க, அத்தகைய ஆட்களினால் திறக்கப்பட்டு அத்துடன்/அல்லது பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைப்புச் செய்யாமல் தாம் பிடித்து வைத்திருப்பதற்கு உரித்துடையவராகார்.

2.4. இலங்கைக்கு வெளியில் வதியும் ஒருவருக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் தனிநபரொருவர், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து 7 நாட்களை விஞ்சாத காலப்பகுதிக்குள் அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொண்ட நபரின் பெயரிலுள்ள வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கில் வைப்பிலிடாமலோ அல்லது உரிமம்பெற்ற வணிக வங்கியொன்றிற்கு விற்பனை செய்யாமலோ தாம் பிடித்து வைத்திக்கக்கூடாது.

2.5 இவ்வறிவித்தலில் 1.1 ஆம் பந்தியில் (இ) துணை பந்திக்கிணங்க, வெளிநாட்டு நாணயங்களை உடைமையில் வைத்திருக்கும் இலங்கையில் வதிவுடைய ஆளொருவருக்கு மேலேயுள்ள 2.2 மற்றும் 2.3 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு ஏற்புடையதாகாது.

*3.* **இவ்வறிவித்தலின் நோக்கங்களுக்கான பொருள்கோடல் :**

*3.1 இவ்வறிவித்தலின் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி -*

(அ) "**அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்**" என்பதன் பொருள், தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயம் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகராக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்று கருதப்படுகின்றது;

(ஆ) "**அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்**" என்பதன் பொருள், அதிகாரம் அளிக்கப்பட்ட வணிகர் ஒருவர்நீங்கலாக, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், மத்திய வங்கியினால் தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஒருவர் எனப் பொருள்படும் ;

(இ) "**வெளிநாட்டு நாணயம்**" என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) "**நாணயம்**" என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(உ) "**வெளிநாட்டுச் செலாவணி**" என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) "**இலங்கையில் வதியும் ஒருவர்**" அல்லது "**இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவர்**" என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் வழங்கப்பட்ட பணிப்பிலும் 1972, ஏப்பிறல் 21 ஆந் திகதிய 15,007 ஆம் இலக்க *அரசாங்க வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட கட்டளையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் 25 ஆந் திகதிய 1516/ 19 ஆம் இலக்க, அதி விசேட *அரசாங்க வர்த்தமானியில்* வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ரி. எம். ஜே. வை. பி. பர்னாந்து,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2016, சனவரி 20.

*3- 267*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.